
# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 340 | 4 Pages | 2.7.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 340 | 4 பக்கங்கள் | 2.7.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## அமெரிக்கா: கணவருக்கு சோடாவில் விஷம் கலந்து கொடுத்த மனைவி; விசாரணையில் திடுக் தகவல்



நியூயார்க், ஜூலை 2

அமெரிக்காவின் மிசவுரி பகுதியை சேர்ந்தவர் மிச்செலே ஒய் பீட்டர்ஸ் (வயது 47). இவர் தன்னுடைய கணவருக்கு கொடுத்த சோடாவில் விஷம் கலந்து இருக்கிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கான பின்னணி அதிர்ச்சி அடைய வைக்கிறது.

இவருடைய கணவரின் 50வது பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு பீட்டர்ஸ், பிறந்த நாள் விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கணவரும் கலந்து கொண்டிருக்கிறார். ஆனால், அதனை பாராட்டி அவர் எதுவும் கூறவில்லை.

இதனால், ஆத்திரத்தில் இருந்த மனைவி பீட்டர்ஸ், கணவருக்கு சோடாவில் களைக்கொல்லியை கலந்து கொடுத்து விட்டார். அதனை அவருடைய கணவர் வாங்கி குடித்தபோது, முதலில் சுவை வேறுபட்டு இருந்துள்ளது. எனினும், அதனை புறந்தள்ளி விட்டு சோடாவை குடித்து முடித்திருக்கிறார்.

சில வாரங்கள் கழித்தே அதன் விளைவுகள் தெரிய வந்தன. அவருக்கு வறண்ட தொண்டை, பேதி மற்றும் வாந்தி ஏற்பட்டு உள்ளது. மனைவி விஷம் கலந்து கொடுத்திருக்கிறார் என அவருக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

சி.சி.டி.வி. காட்சியை சந்தேகத்தின்பேரில் பார்த்தபோது, பிரிட்ஜில் இருந்து மனைவி சோடாவை எடுப்பதோடு, வீட்டில் இருந்த களைக்கொல்லி பாட்டிலையும் எடுத்து சென்ற காட்சியை கண்டார். பின்னர் சிறிது நேரத்தில் இரண்டு பொருட்களையும் எடுத்த இடத்தில் பீட்டர்ஸ் வைத்து விட்டார்.

அவர் மனைவியிடம் சென்று, தனக்கு உடல்நிலை சரியில்லை என கூற முயன்றிருக்கிறார். ஆனால் அதற்குள் மனைவியோ, உங்களுக்கு கொரோனா வந்திருக்க கூடும். அதனால், குழந்தைகளிடம் இருந்து தள்ளி இருங்கள் என கூறியிருக்கிறார்.

இதனை கேட்டு கணவர் அதிர்ச்சி அடைந்து இருக்கிறார். இதன்பின் ஒரு முடிவுக்கு வந்து, போலீசில் அவர் புகார் அளித்து உள்ளார். அவர்கள் வந்து பீட்டர்ஸை கைது செய்து சென்றனர். விசாரணையில் இந்த திடுக்கிடும் தகவல் தெரிய வந்துள்ளது.

அவருக்கு சட்டவிரோத தொடர்பு ஏதும் உண்டா? அல்லது கணவரான தன்னுடைய ரூ.4 கோடி காப்பீட்டு தொகையை பெறுவதற்காக இதனை அவர் செய்திருக்கிறாரா? என தனக்கு தெரியவில்லை என கணவர் கூறுகிறார். சமீபத்தில், வங்கியில் அவர்களுக்கானதனி கணக்கில் பீட்டர்ஸ் செலுத்தும் பணமும் பெரிய அளவில் குறைந்துள்ளது. இதனையும் அவருடைய கணவர் கவனித்து போலீசாரிடம் கூறியிருக்கிறார். தொடர்ந்து போலீசாரின் விசாரணை நடந்து வருகிறது.

## சுவிட்சர்லாந்தில் வெள்ளம், நில சரிவு: 4 பேர் பலி; 2 பேர் மாயம்




பெர்ன், ஜூலை 2

சுவிட்சர்லாந்து நாட்டின் தெற்கே மேகியா பள்ளத்தாக்கு பகுதியில் கனமழையால் வெள்ளம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, பல இடங்களில் நில சரிவு சம்பவங்களும் ஏற்பட்டன.

இதில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் கைப்பற்றப்பட்டு, அடையாளம் காணப்பட்டு உள்ளன. இந்நிலையில், அந்நாட்டின் வலாய்ஸ் கேன்டன் காவல் துறை வெளியிட்ட செய்தியில், பின் என்ற கிராமத்தில் 52 வயது நபர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என தெரிய வந்தது. இதுபற்றிய விசாரணையில், சாஸ்கிரண்ட் பகுதியில் உள்ள ஓட்டல் ஒன்றில் அந்த நபர் உயிரிழந்து கிடக்கிறார் என தெரிய வந்தது என தெரிவித்தனர். இதுதவிர லாவிஜாரா பகுதியில் ஒருவர் காணாமல் போயுள்ளார். வலாய்ஸ் கேன்டன் பகுதியில் மற்றொரு நபர் காணாமல் போயுள்ளார். இதனால், மொத்தம் 2 பேர் காணாமல் போயுள்ளனர். சுவிட்சர்லாந்தின் அண்டை நாடான இத்தாலி நாட்டிலும், வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். காக்னி பகுதியில் இருந்து 200 பேரும், ஆல்பைன் கிராமத்தில் இருந்து 120 பேரும் மீட்கப்பட்டு உள்ளனர்.

## நைஜீரியா: குழந்தையை சுமந்தபடி தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் நடத்திய பெண்; 18 பேர் பலி

போர்னோ, ஜூலை 2

நைஜீரியா நாட்டில் விடுமுறை நாளான ஞாயிறன்று, அடுத்தடுத்து 3 இடங்களில் குண்டுவெடிப்பு சம்பவங்கள் நடந்து உள்ளன. இதில் சிக்கி பலர் பலியாகி உள்ளனர். அந்நாட்டின் வடகிழக்கே அமைந்த போர்னோ மாகாணத்தில் முதலில், திருமண நிகழ்ச்சியில் குண்டுவெடிப்பு நடந்தது.

இதனை தொடர்ந்து, குவோஜா நகரில் உள்ள பொது மருத்துவமனையில்மற்றொருகுண்டுவெடிப்புநடந்தது. இதன்பின்னர் இறுதி சடங்கு நிகழ்ச்சி ஒன்றில் குண்டுவெடிப்பு நடந்தது.


அந்நாட்டின் போர்னோ மாகாண அவசரகால மேலாண் கழகத்தின் இயக்குநர் ஜெனரல் பர்கிந்தோ முகமது சையது, குவோஜா நகரில் சம்பவ பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

போகோ ஹரம் என்ற போராளி குழுவினர் பத்து ஆண்டுகளாக கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் நடத்தி வரும் வன்முறை சம்பவத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து உள்ளனர். எனினும், இந்த தாக்குதலுக்கு அவர்கள் பொறுப்பேற்கவில்லை.

இதில், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள், கர்ப்பிணிகள் உள்பட 18 பேர் உயிரிழந்தனர். 48 பேர் காயமடைந்து உள்ளனர். அவர்களில், 19 பேர் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். 23 பேர் சிகிச்சை முடிந்து செல்ல உள்ளனர்.

இதேபோன்று, திருமண நிகழ்ச்சியில் உயிரிழந்தவர்களின் இறுதி சடங்கில் 3வது குண்டுவெடிப்பு நடந்துள்ளது. குழந்தையை முதுகில் சுமந்தபடி வந்த பெண் ஒருவர் தற்கொலை வெடிகுண்டு தாக்குதலை நடத்தியுள்ளார் என கூறப்படுகிறது. 2 இடங்களிலும் பெண்கள் தற்கொலை வெடிகுண்டு தாக்குதலை நடத்தியுள்ளனர்.

# மாநில கல்வி கொள்கை: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் 650 பக்க அறிக்கை சமர்ப்பிப்பு




சென்னை, ஜூலை 1

தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்து மாநில கல்விக் கொள்கையை உருவாக்க கடந்த 2022ம் ஆண்டு ஓய்வு பெற்ற டெல்லி ஐகோர்ட்டு நீதிபதி முருகேசன் தலைமையில் 14 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்த குழு 650 பக்கங்கள் கொண்ட அறிக்கையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் இன்று சமர்ப்பித்தது. அதில் 3, 5, 8ம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு கூடாது என்றும் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழி கொள்கையையே கடைபிடிக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மாநிலக் கல்விக் கொள்கை தயாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று சமர்ப்பித்தது.

2021, 22ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் "தமிழ்நாட்டின் வரலாற்று மரபு, தற்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோள்களுக்கு ஏற்ப, மாநிலத்திற்கெனத் தனித்துவமான மாநில கல்வி கொள்கை ஒன்றை வகுப்பதற்கு, கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை இந்த அரசு அமைக்கும்" என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, குழுவின் உறுப்பினர்கள் எஸ்.இராமகிருஷ்ணன், பேராசிரியர் இராம சீனுவாசன், எழுத்தாளர் பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில், முனைவர் அருணாரத்னம், ஜெயஸ்ரீ தாமோதரன், துளசிதாசன், டி.எம். கிருஷ்ணா, இரா.பாலு, முனைவர் ப்ரீடா ஞானராணி, பேராசிரியர் பழனி, குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் ஏ. கருப்பசாமி, பள்ளிக்கல்வித்துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசு பள்ளி பிள்ளைகளுக்கு காவலாக நிற்கும் மதுரை பாட்டி: ஒன் வுமன் ஆர்மி பாண்டியம்மாள்



மதுரை, ஜூலை 2

பேருந்துக்காகக் காத்திருக்கும் அரசுப்பள்ளி மாணவிகளை மூதாட்டி ஒருவர் பத்திரமாக ஏற்றி விட்டு அறிவுரைகூறி அனுப்பி வைக்கும் சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியள்ளது.

"பிள்ளைகள சூதானமா ஏத்திட்டு போய் சூதானமா இறக்கி விடனும் சரியா..." என்று அன்பான அதட்டலுடன் கண்டக்டருக்கு ஆர்டர் போடும் இவர்தான் பாண்டியம்மாள்.

மதுரை யா.ஒத்தக்கடை அரசு பெண்கள் மாதிரி மேல்நிலைப்பள்ளியில் ஒப்பந்தப் பணியாளரான பாண்டியம்மாள்... பள்ளி விட்டதும்... மாணவிகளுக்கு முன்னால் குடுகுடுவென ஓடி வந்து வாசலில் நின்று கொள்வார்.

"ஓரங்கட்டு...ஓரங்கட்டு...புள்ளைங்க நிக்குதுல்ல..."

என்று அங்கு வரும் அரசுப் பேருந்துகளை வரிசையாக நிறுத்தி "எங்க ஸ்கூல் பிள்ளைங்கள ஏத்திட்டுப் போங்கப்பா" என்று பள்ளி மாணவிகளைத் தன் பேத்திகளைப் போல் பொறுப்புடன் அவரவர் ஊருக்கு பத்திரமாக ஏற்றி விடுவார்...

பேருந்துப் படிக்கட்டில் மாணவிகள் நின்றுவிட்டால் படுகோபம் வந்துவிடும் பாண்டியம்மாளுக்கு... அதட்டி உருட்டி மாணவிகள் உள்ளே போகும் வரை பேருந்தை எடுக்க விடமாட்டார் பாண்டியம்மாள்...

பேருந்துகளில் ஏற்றிவிடும்போது மட்டும்தான் பாட்டி பாண்டியம்மாளின் அதட்டல் உருட்டலெல்லாம்... மாணவிகள் உள்ளே சென்றுவிட்டால் பாசமழை பொழிவார்...

ஒன் வுமன் ஆர்மியாக செயல்படும் பாண்டியம்மாள் ஒவ்வொரு மாணவியையும் அவரவர் செல்லும் பேருந்துகள், ஷேட் ஆட்டோக்கள், மினி பஸ்களில் ஏற்றி விட்டு பள்ளி வளாகம் காலியான பிறகுதான் நிம்மதி கொள்வார்...

தலைமை ஆசிரியை மற்றும் மற்ற ஆசிரியர்களும் மாணவிகளுக்கு அறிவுரை கூறி அனுப்பி வைக்கின்றனர்...

பாட்டி பாண்டியம்மாள் பள்ளியில் உள்ள செடிகளைப் பராமரிக்க ஆயிரம் ரூபாய் ஊதியத்திற்கு வந்து தற்போது 15 ஆண்டுகளாக இதே பள்ளியில் பணிபுரிந்து மரம், செடி கொடிகளைப் போலவே மாணவிகளைப் பாதுகாக்கும் அரணாக உள்ளார்..

பாதுகாப்பு அரண் என ஏன் கூறுகிறோம் தெரியுமா?... 1 மணி நேரத்திற்கு ஒருமுறை பாண்டியம்மாள் பள்ளியைச் சுற்றி ரவுண்ட்ஸ் வருவார்... பள்ளி சுற்றுச் சுவர் அருகே சந்தேகப்படும்படியாக யாரேனும் நின்று கொண்டிருந்தால் அவர்கள்யார்என்னஎனவிசாரித்து, சரியாகப் படவில்லை என்றால் உடனே போலீசுக்குத் தகவல் கொடுக்கும் ஏஜென்ட்டாகவும் உள்ளார்.

"பாட்டிதான் வர்றாங்க...பதறவிடப் போறாங்க..." என்பதைப் போல் ட்ரைவர், கண்டக்டர் துவங்கி மாணவிகள் வரை அனைவரையும் அன்பாக மிரட்டி உருட்டும் பாட்டி பாண்டியம்மாளுக்கு அப்பள்ளியில் ஒருபெரிய ரசிகர் பட்டாளமே உண்டு.

இடையில் எங்கும் இறங்கக் கூடாது என்று கண்டிப்புடன் அறிவுரை கூறும் பாட்டி பாண்டியம்மாளால் தான் மாணவிகள் பத்திரமாக தங்கள் வீடுகளுக்குச் செல்கின்றனர்... பெற்றோர்களும் நிம்மதியடைகின்றனர்.

# செஞ்சியில் முப்பெரும் விழா



செஞ்சி , ஜூலை 2

செஞ்சி உதவும் உள்ளங்கள் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூபாய் 50,000 கல்வி உதவித்தொகை வழங்கும் விழா, பழங்குடி குழந்தைகள் 30 பேருக்கு பள்ளி பேக் வழங்கும் விழா, உதவும் உள்ளங்கள் ட்ரஸ்டில் சிறப்பாக சமூகப் பணி செய்தவர்களுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் உதவும் உள்ளங்கள் ட்ரஸ்ட் செயலாளர் ஜெயசீலன் வரவேற்புரை வழங்கினார். சங்கமம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவர், அரசு வழக்கறிஞர் ஜிகே கிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்கினார். விழுப்புரம் மாவட்ட சிறப்பு வருவாய் ஆய்வாளர் சமூக சேவகர் கண்ணன், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை இரத்த ஆற்றுப்படுத்துனர் அசோக் குமார், வழக்கறிஞர், வெற்றிச்செல்வன், சென்னை வினோத்குமார், உதவி பேராசிரியர் முனைவர் சுதாகர், இல்லோடு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி ஜானகி ஸ்டாலின், செஞ்சி ஜேம்ஸ் சியாமளா, லலிதா ஜுவல்லரி பாலசுப்ரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தற்போது உள்ள சூழ்நிலையில் இளைஞர்கள் இதுபோன்ற சமூக சேவைகள் செய்ய முன்வர வேண்டும் என்றும், ரத்ததானம் செய்ய வேண்டும் என்றும், ஏழை மக்களுக்கு தேடிச் சென்று உதவ வேண்டும் என்றும், போதைப் பொருள் விழிப்புணர்வு பொது மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்றும், இதுபோன்று அனைத்து கிராமங்களிலும் இளைஞர்கள் சமூகப் பணி செய்ய முன்வர வேண்டும் என்றும் சென்னை எண்ணங்களின் சங்கமம் நிறுவன தலைவர் ஜே பி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மேலும், பெற்றோரை இழந்த கல்லூரி படிக்கும் 5 மாணவிகளுக்கு தலா ரூ. 10000 வீதம் ரூபாய் 50,000 கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. பழங்குடி பள்ளி குழந்தைகள் 30 பேருக்கு பள்ளி பேக் வழங்கப்பட்டது. உதவும் உள்ளங்கள் ட்ரஸ்ட் உறுப்பினர்கள் மற்றும் ரத்த தானம் செய்தவர்கள் மற்றும் உதவும் உள்ளங்கள் ட்ரஸ்டுக்கு உதவியவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் செஞ்சி பகுதியில் உள்ள சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் உதவும் உள்ளங்கள் ட்ரஸ்ட் நிறுவனர் ஜான் சத்தியசீலன் நன்றி கூறினார்.

# தோட்டத்தில் கஞ்சா செடி வளர்த்த சித்த வைத்தியர்

ஈரோடு, ஜூலை 2

கள்ளக்குறிச்சி விஷ சாராயபலியைதொடர்ந்து தமிழக அரசு விஷ சாராயத்தை அறவே ஒழிக்கும் வகையில் மதுவிலக்கு சட்டத்தில் திருத்தம் செய்துள்ளது. இதனை சட்டசபையில் நேற்று முன்தினம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார்.



அதில் கள்ளச்சாராயம் உள்ளிட்ட போதை வழக்குகுற்றவாளிகளுக்கு வழங்கப்படும் சிறை தண்டனை மற்றும் அபராத தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா பயிரிடுதல் மற்றும் போதை மருந்துகள் தயாரிப்புகள் தொடர்பான குற்றங்களிலும் ஈடுபடுபவர்களுக்கு ஒரு ஆண்டு முதல் 3 ஆண்டு வரை சிறை தண்டனையும், ரூ.50 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து தமிழகம் முழுவதும் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி ஈரோடு மாவட்டத்திலும் போலீசார் சோதனை செய்து வருகிறார்கள். இந்தநிலையில் கோபி அருகே உள்ள எலத்தூர் செட்டிபாளையம் பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தில் கஞ்சா செடி வளர்ப்பதாக கோபி மதுவிலக்கு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் போலீசார் அங்கு சென்று சோதனை செய்தபோது மூலிகை செடிகளுடன் கஞ்சா செடி பயிரிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தோட்ட உரிமையாளரான சித்த வைத்தியர் மாரப்பன் (வயது 80) என்பவரை கைது செய்தனர். உடந்தையாக இருந்ததாக அவருடைய மகன் கருப்புசாமியும் (45) கைது செய்யப்பட்டார். மேலும் தோட்டத்தில் இருந்த 11 கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டன.

# ரெயில்களில் தீபாவளி பண்டிகை முன்பதிவு: சில நிமிடங்களிலேயே விற்றுத்தீர்ந்த டிக்கெட்டுகள்

சென்னை, ஜூலை 2

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிக்கு முன்பாக ரெயில்களில் மட்டும் சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தங்களின் சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். இந்த நிலையில், இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை வரும் அக்டோபர் மாதம் 31ந் தேதி (வியாழக்கிழமை) கொண்டாடப்படுகிறது.

எனவே, பொதுமக்களின் வசதிக்காக 120 நாட்களுக்கு முன்பாக டிக்கெட் முன்பதிவு செய்யும் வசதி உள்ளது. அந்த வகையில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ரெயில்களில் டிக்கெட் முன்பதிவு நேற்று தொடங்கியது. அதன்படி, அக்டோபர் மாதம் 29ந் தேதி சொந்த ஊர்களுக்கு செல்பவர்களுக்கு நேற்று ரெயில் டிக்கெட் முன்பதிவு நடந்தது. இதில், தென் மாவட்டங்களுக்குசெல்லும்நெல்லை, குருவாயூர் எக்ஸ்பிரஸ் ஆகிய ரெயில்களில் டிக்கெட்டுகள் 15 நிமிடத்திலேயே விற்றுத்தீர்ந்தன.

இதேபோல, கன்னியாகுமரி, நிஜாமுதீன், அனந்தபுரி, திருச்செந்தூர் ஆகிய எக்ஸ்பிரஸ் ரெயில்களில் டிக்கெட் முன்பதிவு வேகமாக நடந்து வருகிறது. பெரும்பாலான பயணிகள் இணையதளம் மூலம் டிக்கெட் முன்பதிவு செய்து வருகின்றனர். மேலும், அக்டோபர் 29ந் தேதி பயணம் செய்பவர்கள் இன்றும், அக்டோபர் 30ந் தேதி பயணம் செய்பவர்கள் நாளையும் ரெயில் டிக்கெட் முன்பதிவு செய்துகொள்ளலாம் என தெற்கு ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆசை வார்த்தை கூறி உல்லாசம்... சிறுமியை கர்ப்பமாக்கிய பெயிண்டர் கைது

சென்னை, ஜூலை 2

சென்னையை அடுத்த பெரும்பாக்கம் எழில் நகரை சேர்ந்தவர் அருள்ராஜ் (வயது 24). பெயிண்டர். இவர் தன்னுடன் வேலை செய்யும் சக தொழிலாளி வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளார்.

அப்போது சக தொழிலாளியின் 15 வயது மகளிடம் பழகி காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும் ஆசை வார்த்தை கூறி அடிக்கடி உல்லாசமாக இருந்து உள்ளார். இந்த நிலையில் சிறுமி கர்ப்பம் ஆனார்.

இது குறித்து சிறுமியின் பெற்றோர்பெரும்பாக்கம் போலீசில்புகார்செய்தனர். இதையடுத்து போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து அருள்ராஜை கைது செய்தனர்.

# விண்வெளி துறையில் அடுத்த 10 ஆண்டுகளில் 10,000 வேலை வாய்ப்புகள்

சென்னை, ஜூலை 2

தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் கடந்த மாதம் 20ம் தேதி தொடங்கியது. முதல்நாள் சட்டசபை கூட்டத்தொடரில் இரங்கல் தீர்மானத்துடன் அவை முடிந்தது. அதன் பின்னர்கூட்டத் தொடரில் தொழில் மற்றும் முதலீட்டு துறை மீதான மானிய கோரிக்கை விவாதத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

அப்போது, வானூர்தி மற்றும்பாதுகாப்புத்துறையில்பெரும் முதலீடுகளை ஈர்த்து வருவதன் தொடர்ச்சியாக மேலும் இத்துறை சார்ந்த பன்னாட்டு நிறுவனங்களை ஈர்த்து அதிகளவிலான முதலீடுகளை பெறும் நோக்கில் தமிழ்நாடு விண்வெளி தொழில் கொள்கை வெளியிடப்படும். தமிழ்நாட்டை விண்வெளி தொழிலில் முன்னணி மாநிலமாக மேம்படுத்தவும், அதிகளவிலான முதலீடுகளை ஈர்க்கவும் விண்வெளி தொழில் கொள்கை வெளியிடப்படும் என தெரிவித்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு விண்வெளி தொழில் கொள்கை வெளியிடப்படும் என தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவித்த நிலையில் அதற்கான வரைவு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விண்வெளி துறையில் அடுத்த 10 ஆண்டுகளில் 10,000 வேலைவாய்ப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயம். புதிய மற்றும் விரிவாக்க தொழில் துவங்கும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம். மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டங்கள் விண்வெளி தொழில் விரிவாக்க மாவட்டங்களாக அறிவிப்பு. அனைத்துதரப்பினரும் கருத்துகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை: மொபட்டில் இருந்து கீழே விழுந்த இளம்பெண்.. உள்ளங்கையை துளைத்த கம்பி

சென்னை, ஜூலை 2

சென்னை புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்தவர் பவித்ரா (வயது 19). இவர், சென்டிரல் அருகே உள்ள சூப்பர் மார்க்கெட் ஒன்றில் வேலை பார்த்து வருகிறார். நேற்று வேலை முடிந்து மொபட்டில் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார்.



அப்போது எதிர்பாராத விதமாக நிலைதடுமாறி மொபட்டில் இருந்து தவறி விழுந்தார். இதில், சாலையோர இரும்பு கம்பி அவரது உள்ளங்கையை குத்தி கிழித்தது. இதனால் அவர் வேதனையில் அலறி துடித்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டு இரும்பு கம்பியை அறுத்து எடுத்து அவரை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# அதிநவீன சொகுசு பேருந்து சேவை: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூலை 2

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:




ஏராளமான உள்ளூர் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்றுலாத்துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத்தலங்கள் அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலா தலங்கள், பழம்பெரும் திருக்கோவில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலாதலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத்துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மேலும், உள்நாட்டு சுற்றுலா பயணிகள் தமிழ்நாட்டின்பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாக வருகை தரும் வகையில் தமிழ்நாட்டின் நகரங்களை, நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களுடன் இணைக்கும் வகையிலான இரயில் சேவைகளும், தேசிய, மாநில நெடுஞ்சாலை இணைப்பு வசதிகளும் அதிக அளவில் கொண்ட மாநிலமாகவும், பேருந்து உள்ளிட்ட அனைத்து விதமான போக்குவரத்து வசதிகள் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கின்றது.

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971ம் ஆண்டு உருவாக்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலா பேருந்து சேவைகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், படகு குழாம்கள் போன்ற பல்வேறு சேவைகளை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில், சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக 3 கோடி ரூபாய் மதிப்பிலான 35 இருக்கைகள் கொண்ட 4 பேருந்துகள் மற்றும் 18 இருக்கைகள் கொண்ட 1 பேருந்து என 5 புதிய அதிநவீன சொகுசு சுற்றுலா பேருந்துகளை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த பேருந்துகளில் நீண்டதூரம் மற்றும் நீண்ட நாட்கள் சுற்றுலா பயணம் மேற்கொள்ள குளிர்சாதன வசதி. மிதவை அமைப்பு ( AIR SUSPENSION) வசதி, வாகனத்தின் இருப்பிடத்தை அறிய ஜிபிஎஸ் கருவி, வைபை வசதி, ஒவ்வொரு இருக்கையிலும் போன்சார்ஜ் செய்யும் வசதி, 35 பயணிகளும் நீண்ட நாள் பயணத்திற்கான தங்கள் பொருட்களை தாராளமாக வைத்துக் கொள்ள மிகப்பெரிய அளவிலான பொருட்கள் வைப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் க. மணிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தஞ்சையில் நடந்த என்ஐஏ சோதனையில் 2 பேர் கைது

தஞ்சாவூர், ஜூலை 2

சென்னை, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, கும்பகோணம் உள்ளிட்ட 12 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) அதிகாரிகள் அதிகாலை 5 மணி முதல் சோதனை மேற்கொண்டனர். உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட 'ஹிஜ்புர் தகர்' இயக்கத்துக்கு ஆள் சேர்ப்பது, அந்த அமைப்புகளுக்கு உடந்தையாக செயல்பட்டது தொடர்பாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு சொந்தமான வீடுகள், அலுவலகங்களில் சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியானது. இந்த நிலையில், தஞ்சாவூரில் 4 இடங்களில் நடந்த என்ஐஏ சோதனையில் 2 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சாலியாமங்கலத்தை சேர்ந்த முஜிபுர் ரகுமான், அப்துல் ரகுமான் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதான இருவர் மீதும் உபா சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சோதனையின் போது என்ஐஏ அதிகாரிகள் சில பென்டிரைவ், லேப்டாப் ஆகியவற்றை பறிமுதல்செய்ததாகபோலீஸார்தரப்பில்கூறப்படுகிறது. என்ஐஏ அதிகாரிகள் சோதனை நடத்திய போது உள்ளூர் போலீசார் பாதுகாப்பு அளித்தனர்.

# ரூ.3,000 கோடி கடனுதவி பெற அமெரிக்கா செல்கிறேன் அமைச்சர் மா.சு

விக்கிரவாண்டி, ஜூலை 2

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜூலை) 10ந் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூலை 13ந் தேதி எண்ணப்படுகிறது. தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் தீவிரமாக நடந்து வருகிறது. தேர்தல் பிரசாரத்தில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில், விக்கிரவாண்டியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தேர்தல் பரப்புரையில்ஈடுபட்டார். அப்போது பேசிய அவர், உலக வங்கியில் ரூ.3,000 கோடி கடன் வாங்க உள்ளதாக தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், "ரூ.3,000கோடிகடனுதவி பெற அமெரிக்கா செல்ல உள்ளேன். மருத்துவத் துறை திட்டங்களை செயல்படுத்த உலக வங்கியில் ரூ.3,000 கோடி கடனுதவி கேட்க உள்ளேன்." என தெரிவித்தார்.

# 4 மாத கர்ப்பிணி தூக்குப்போட்டு தற்கொலை: கணவர் இறந்த 2 நாளில் சோகம்

திருவண்ணாமலை, ஜூலை 2

திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் அருகே சொரகொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் அஜித்குமார், போலீஸ்காரர். இவருக்கும் புதுச்சேரி பகுதியை சேர்ந்த திவ்யபாரதி (வயது 23) என்பவருக்கும் திருமணம் நடந்தது. இவர்களுக்கு சர்வேஷ் (1), என்ற மகன் உள்ளார்.

தற்போது திவ்யபாரதி 4 மாத கர்ப்பிணியாக இருந்தார். இந்த நிலையில் கடந்த 28ந் தேதி அஜித்குமார்திடீரெனபூச்சி மருந்து (விஷம்) குடித்து தற்கொலை செய்து கொண்டார்.இதனால்திவ்யபாரதி கடந்த 2 நாட்களாக கணவரை பிரிந்த மனவேதனையில் இருந்தார்.

இந்த நிலையில் நேற்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் திவ்யபாரதி தூக்குப்போட்டு கொண்டார். அப்போது அங்கு வந்த அவரது தாய் பாக்கியலட்சுமி இதனை பார்த்து கூச்சல் போட்டார். உடனடியாக அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து அவரை மீட்டு அதே பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். இதுகுறித்து தகவல் அறிந்த கலசபாக்கம் போலீசார் திவ்யபாரதியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கணவர் இறந்த 2 நாட்களில்கர்ப்பிணிதற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# அழுது கொண்டே இருந்ததால் ஆத்திரம்: 5 மாத பெண் குழந்தையை அடித்துக்கொன்ற கொடூர தந்தை

ஊட்டி, ஜூலை 2

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே ஒல்டு ஊட்டி பகுதியை சேர்ந்தவர் பிரேம் (வயது 31). கூரியர் நிறுவன ஊழியர். இவருடைய மனைவி ரம்யா (21). இவர்களுக்கு கடந்த 1½ ஆண்டுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு கேத்தரின் ஏஞ்சல் என்ற 5 மாத பெண் குழந்தை இருந்தது.

பிரேம் தினமும் காலை 7 மணிக்கு வீட்டில் இருந்து வேலைக்கு சென்று விட்டு இரவு 9 மணிக்கு திரும்புவது வழக்கம். இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு பிரேம் வேலைக்கு சென்று உள்ளார். அவர் சென்ற சிறிது நேரத்தில் குழந்தையின் கன்னம் சிவந்த நிலையில் இருந்தது. அதோடு நீண்ட நேரமாகியும் குழந்தையிடம் எந்த அசைவும் இல்லை. இதனால் பயந்து போன ரம்யா அக்கம் பக்கத்தினர் உதவியுடன் குழந்தையை ஊட்டி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்.



அங்கு குழந்தையை பரிசோதனை செய்த டாக்டர்கள், ஏற்கனவே குழந்தை இறந்து விட்டதாக தெரிவித்தனர். குழந்தையின் சாவில் சந்தேகம் இருந்ததால் அதிர்ச்சி அடைந்த ரம்யா, இதுகுறித்து ஊட்டி மத்திய போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் இன்ஸ்பெக்டர் முரளிதரன், சப்இன்ஸ்பெக்டர் சுரேஷ்குமார் தலைமையிலான போலீசார் சந்தேக மரணம் என வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதில் கடந்த சில நாட்களாக குழந்தையின் அழுகை சத்தத்தை தாங்க முடியாததால் பிரேம் அவ்வப்போது குழந்தையை அடித்து வந்துள்ளார். அதற்கு ரம்யா எதிர்ப்பு தெரிவித்தார். நேற்று முன்தினம் ரம்யா துணி துவைத்துக் கொண்டிருந்த போது, குழந்தை அழுது கொண்டே இருந்தது. இதனால் ஆத்திரமடைந்த பிரேம் குழந்தையை அடித்து உள்ளார். இதில் மூளைக்கு செல்லும் ரத்த குழாயில் அடிபட்டு ரத்தம் உறைந்து குழந்தை இறந்தது தெரியவந்தது.

இதையடுத்து கொலை வழக்காக மாற்றி போலீசார் பிரேமை கைது செய்தனர். பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். பிரேமுக்கு மனநல பாதிப்பு உள்ளதா என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குழந்தையின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. குழந்தையின் இறப்பை தாங்க முடியாத சோகத்தில் ரம்யா கதறி அழுதது பரிதாபமாக இருந்தது. இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழக மீனவர்கள் 25 பேர் கைது: இலங்கை கடற்படை தொடர் அட்டூழியம்

சென்னை, ஜூலை 2

61 நாள் மீன்பிடி தடைக்காலம் நிறைவு பெற்று விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு சென்று வருகின்றனர். இதற்கிடையில் இலங்கை கடற்படையினரின் அத்துமீறிய நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.



இந்த நிலையில், ராமேசுவரம் தனுஷ்கோடியில் இருந்து சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அதன்படி கச்சத்தீவு மற்றும் நெடுந்தீவு அருகே மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி மீனவர்கள் 25 பேரை கைது செய்தனர். மேலும் 4 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட 25 மீனவர்களும் காங்கேசன் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தொடர்ந்து அவர்களிடம் அங்கு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மீனவர்கள் 25 பேர் சிறைப்பிடிக்கப்பட்ட தகவல் அறிந்த சக மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். உடனடியாக அவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

# வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.31 குறைவு

சென்னை, ஜூலை 2

பெட்ரோல், டீசல் விலையை சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய்விலைக்கேற்ப நிர்ணயித்துக் கொள்ள எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்துள்ளது.

அதேபோல சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை எண்ணெய் நிறுவனங்களே நிர்ணயித்து கொள்கின்றன. ஒவ்வொரு மாதமும் சர்வதேச சந்தை நிலவரத்திற்கு ஏற்ப இந்த விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த நிலையில், எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி,19கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டு சிலிண்டரின் விலை ரூ.31 குறைந்து ரூ.1,809.50 விற்பனை செய்யப்படுகிறது. தொடர்ந்து 4வது மாதமாக வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை குறைக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் எந்த மாற்றமும் இல்லை. 14 கிலோ எடை கொண்ட சிலிண்டர் விலை ரூ.818.50 ஆகவே நீடிக்கிறது.

# அரசியல் மாற்றத்திற்கு ஆயிரக்கணக்கான தலைவர்கள் வேண்டும்: விஜய்யின் கருத்துக்கு அண்ணாமலை பதில்



கோவை, ஜூலை 2

கோவையில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவரிடம், தமிழகத்திற்கு ஒருநல்லதலைவர்தேவை என்று நடிகர் விஜய் கூறியது பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்தபோது அவர் கூறியதாவது;

"தமிழகத்திற்கு ஒரு நல்ல தலைவர் தேவை என்பது என்னுடைய கருத்து இல்லை. உண்மையை சொல்ல வேண்டும் என்றால், ஒரு முதல் அமைச்சரால் எதுவும் செய்ய முடியாது. அதே போல் ஒரு எம்.எல்.ஏ., ஒரு எம்.பி. ஒரு பஞ்சாயத்து தலைவரால் எதுவும் செய்துவிட முடியாது. அரசியல் மாற்றத்தைக் கொண்டு வருவது என்பது கூட்டு முயற்சி.

படித்த இளைஞர்கள், பெண்கள் ஆகியோர் பஞ்சாயத்து தலைவர் பதவிகளுக்கு போட்டி போட வேண்டும். அவர்களின் ஊர்களிலும், கிராமங்களிலும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

அதைத் தொடர்ந்து கவுன்சிலர்கள், எம்.எல்.ஏ.க்கள். எம்.பி.க்கள் எல்லோரும் சேர்ந்துதான் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

ஒரு முதல்அமைச்சர் நல்லவராக இருந்தாலும், சுற்றி இருப்பவர்கள் அனைவரும் அயோக்கியர்களாக இருந்தால் மாற்றம் நடக்காது. எனவே, தமிழகத்தில் அரசியல் மாற்றத்திற்கு ஆயிரக்கணக்கான தலைவர்கள் வேண்டும் என்பது எங்களுடைய கருத்து."

இவ்வாறு அண்ணாமலை தெரிவித்தார்.

# 'கோட்டையில் கழக கொடியை பறக்கவிட்ட பொன்னாள்' ஜெயக்குமார் நெகிழ்ச்சி



சென்னை, ஜூலை 2

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தனது 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;

"ஏழைகளின் ஏற்றமே நாட்டின் முன்னேற்றம் எனக்கருதி ஏழை எளியோரின் வலியுணர்ந்து வாரி தந்த வள்ளல். தமிழ் நாட்டை சுயநலத்திற்காக சூறையாட நினைத்த சதிகார கும்பலுக்கு எதிராக சாட்டையை சுழற்றி கோட்டையில் கழக கொடியை பறக்க விட்ட பொன்னாள். பொன்மனச் செம்மல் முதல் அமைச்சராக பொறுப்பேற்று பொற்கால ஆட்சி கண்ட தமிழினத்தின் திருநாள்!

30.06.1977ல் முதன்முதலாக முதலமைச்சராக பதவியேற்று 11ஆண்டுகள் கடைக்கோடி மக்களுக்காகவே கழக ஆட்சியை தந்தவர் நம் தங்கத்தலைவர். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் வார்த்தை வரிகளுக்கு ஏற்ப நூறாண்டு தாண்டி நூற்றாண்டு கண்டாலும் மண்ணிலும் மக்கள் மனதிலும் மாற்றமுடியாத இயக்கமாக இருக்கும்! இயங்கும்! என்றென்றும் எம்.ஜி.ஆர்."

இவ்வாறு ஜெயக்குமார் பதிவிட்டுள்ளார்.

# வி.சி.க. சார்பில் செப்டம்பர் 17ந்தேதி மது ஒழிப்பு மாநாடு திருமாவளவன் அறிவிப்பு



மதுரை, ஜூலை 2

மதுரை மேலவளவு படுகொலை 27ம் ஆண்டு நினைவு நாளையொட்டி படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவிடத்தில் இன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் அஞ்சலி செலுத்தினார். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசியபோது அவர் கூறியதாவது;

"கள்ளச்சாராய மரணங்கள் தமிழ்நாடு மட்டுமின்றிஇந்தியாமுழுவதும் நடந்து வருகின்றன. கள்ளச்சாராய மரணங்களுக்கு அரசு மதுபானங்கள் தீர்வு அல்ல. மாநில அரசு மட்டுமின்றி மத்திய அரசும் மதுவிலக்குகொள்கைகுறித்து பரிசீலிக்க வேண்டும். தேசிய அளவில் மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்தினால்தான் கள்ளச்சாராயத்தை தடுக்க முடியும். முழு மதுவிலக்கு கொள்கையில் வி.சி.க. உறுதியாக உள்ளது. பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ந்தேதி வி.சி.க. சார்பில் மது ஒழிப்பு மாநாடு நடத்தப்பட உள்ளது. இது பெண்கள் மூலம் நடத்தப்படும். விரைவில் இடம் அறிவிக்கப்படும்."

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

# மாநில அரசின் பங்களிப்போடு இன்னும் பல நீதிமன்றங்கள் திறக்கப்படும்: அமைச்சர் ரகுபதி




சேலம், ஜூலை 2

பெருகி வரும் வழக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாநில அரசின் பங்களிப்போடு இன்னும் பல நீதிமன்றங்கள் திறக்கப்படும் என தமிழக அரசின் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது;

"ஒரு நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், அங்கு நீதித்துறையின் பங்களிப்பு மிகுந்த அவசியமாகிறது. பெருகி வரும் வழக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இன்னும் பல நீதிமன்றங்களை திறக்க வேண்டும் என தமிழக அரசின் உள்துறை மற்றும் நிதித்துறையிடம் சென்னை ஐகோர்ட்டு பரிந்துரை செய்திருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசின் பங்களிப்பு கிடைக்கும்போது, மாநில அரசின் பங்களிப்போடு இன்னும் பல நீதிமன்றங்கள் திறக்கப்படும்."

இவ்வாறு அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

# தமிழகத்தில் ஆவின் பால் விற்பனை 25 சதவீதம் அதிகரிப்பு: அமைச்சர் மனோ தங்கராஜ் பேட்டி

கோவை, ஜூலை 2

கோவை, நீலகிரி, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களின் பால்வளத்துறை அதிகாரிகளுடனான ஆய்வுக்கூட்டம் கோவை ரேஸ்கோர்சில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ் பங்கேற்று பால்வளத்துறையின் செயல்பாடுகள் குறித்து பேசினார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஆவின் நிர்வாகம் முன்னேற்றத்தை நோக்கி சென்று வருகிறது . கடந்த காலங்களில் பால் கொள்முதலில் தொய்வுநிலை மாறி தற்போது மிகப்பெரிய அளவில் ஒன்றியங்களில் மட்டும் 36 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஓரிரு வாரங்களில் 40 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அத்துடன் பால் கையாளும் திறனை 70 லட்சம் லிட்டராக உயர்த்தவும் கட்டமைப்பு பணிகள் நடந்து வருகின்றன. இந்தியா முழுவதும் மேய்ச்சல் நிலம் இல்லாத நிலை உள்ளது. மேய்ச்சல் நிலம், விவசாயிகளின் நிலங்களில் தீவன பயிர்களை பயிரிடவும், ஊறுகாய் புல் என்ற தீவன பயிரை அதிகமாக விலைச்சல் செய்து, மலிவு விலையில் விவசாயிகளுக்கு கொடுக்கும் திட்டமும் முதல்கட்டமாக ஈரோட்டில் கொண்டு வர உள்ளது. தமிழகத்தில் ஆவின் பால் விற்பனை 25 சதவீதம் அதிகரித்துள்ளது.

நெய் போன்ற பொருட்கள் நீண்ட நாட்கள் தாங்கக்கூடிய குணம் உள்ளிட்டவைகள் பற்றி ஆராய்ந்து புதிய வியூகங்களை வகுத்து வருகிறோம். தமிழகத்தில் காளை கன்றுகளுக்கு உழவு, உணவு ஆகியவைகளுக்கு மிக தேவை உள்ளது. கிடாரி கன்றுகளை ஈனும் சினை ஊசி ஆரோக்கியமான பழக்கம் என நான் சொல்ல மாட்டேன். மேலை நாடுகளில் ஒரு மாடு 32 லிட்டர் பால் தரும் நிலையில், நமது நாட்டு மாடுகள் 56 லிட்டர் தருகிறது.

இதை 1015 லிட்டராக உயர்த்தினால் விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும். அதற்காக தான் நாட்டு இனங்களை கொண்டு வர முயற்சி எடுத்து வருகிறோம்.

20 லட்சம் கிடாரி கன்றுகளை ஈனும் சினை ஊசிவழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். அமுல் நிறுவனம் விவாதத்திற்கான பொருளே கிடையாது. ஆவின் தயாரிப்புக்கு மக்கள்வரவேற்பு உள்ளது. ஆவின் நிறுவனம் முடிந்ததாக சிலர் சொன்ன நிலையில் தற்போது 36 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் எப்படி செய்ய முடிந்தது?. மாற்றுத்திறனாளிகள், வேலை இல்லாதவர்கள், திருநங்கைகளுக்கு ஆவின் கடை நடத்தி அனுமதி கொடுத்து வருகிறோம்.

தமிழகத்தில் ஆவின் நிர்வாகத்தின் கிளைகள் அதிகரிக்க தேவை உள்ளது. விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஓசூரில் விமான நிலையம்; மக்களை ஏமாற்றும் விதத்தில் தமிழக அரசு செயல்படக் கூடாது: எல்.முருகன் விமர்சனம்

சென்னை, ஜூலை 2

ஓசூரில் பன்னாட்டு விமானநிலையம் அமைக்கப்பட உள்ளதாக சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது குறித்து மத்திய இணை மந்திரி எல்.முருகனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்தபோது அவர் கூறியதாவது;

"ஓசூரில் பன்னாட்டு விமான நிலையம் கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால், ஓசூர் அருகிலேயே பெங்களூரு விமானநிலையம் இருக்கிறது.

இந்நிலையில் ஓசூரில் பன்னாட்டு விமான நிலையம் அமைப்பது சாத்தியமாக இருக்குமா? நாட்டின் வளர்ச்சிக்கு நாம் எப்போதும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அதே சமயம், மக்களை ஏமாற்றும் விதத்தில் தமிழக அரசு செயல்படக் கூடாது"

இவ்வாறு எல்.முருகன் தெரிவித்தார்.

# 'முதுகலை மற்றும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் இந்த மாத இறுதிக்குள் நிரப்பப்படும்': அமைச்சர் அன்பில் மகேஷ்



விழுப்புரம், ஜூலை 2

விக்கிரவாண்டி இடைத்தேர்தலை முன்னிட்டு அந்த தொகுதிக்கு உள்பட்ட கிராமங்களில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், தமிழகம் முழுவதும் முதுகலை மற்றும் இடைநிலை ஆசிரியர் பணியில் சேர்வதற்கு 2 ஆயிரத்து 222 பேர் டி.ஆர்.பி. தேர்வு எழுதி காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், இந்த மாத இறுதிக்குள் காலி பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும் தெரிவித்தார்.

# கலை, அறிவியல் கல்லூரிகளில் ஒரே நேரத்தில் தேர்வு முடிவுகள் வெளியாகும் : கல்லூரி கல்வி இயக்குனர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 2

வரும் கல்வி ஆண்டில் அனைத்து கலை, அறிவியல் கல்லூரிகளிலும் ஒரே நேரத்தில் தேர்வுகள் துவங்கி, முடிவுகளும் வெளியாகும் என கல்லூரி கல்வி இயக்குனர் கார்மேகம் அறிவித்துள்ளார். மேலும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஜூலை 3ம் தேதி வகுப்புகள்துவங்கும்.செமஸ்டர் தேர்வுகள் வரும் அக்டோபர் 31ல் தொடங்கி, நவம்பர் 25ம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும். டிசமர்பர் 16ம் தேதிக்குள் அனைத்து கல்லூரிகளுக்குமான தேர்வு முடிவுகள் வெளியிடப்பட வேண்டும்.இந்த கால அட்டவணையை அனைத்து கலை, அறிவியல் கல்லூரிகளும் பின்பற்ற வேண்டும் எனவும் கல்லூரி கல்வி இயக்குனர் கார்மேகம் உத்தரவிட்டுள்ளார்.

# வெம்பக்கோட்டையில் 3ம் கட்ட அகழ்வாய்வு; 200க்கும் மேற்பட்ட பழங்கால பொருட்கள் கண்டெடுப்பு



விருதுநகர், ஜூலை 2

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே வெம்பக்கோட்டையில் 3ம் கட்ட அகழ்வாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அகழாய்வில் 3 ஆயிரம் ஆண்டுகள் பழமையான சங்கு வளையல் மற்றும் கழுத்தில் அணியும் சுடு மண்ணால் ஆன பதக்கம் உள்ளிட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் கண்ணாடி மணிகள், கல்மணிகள், பழங்கால செங்கற்கள், சிகை அலங்காரத்துடன் பாவையின் தலைப்பகுதி, அலங்கரிக்கப்பட்ட சுடு மண் அகல்விளக்கு, சுடு மண்ணாலான கூம்பு வடிவகிண்ணத்தின்அடிப்பகுதி, சதுரங்கம் விளையாடும் ஆட்டக்காய், சில்வட்டு, எலும்புகள்மற்றும் பானைஒடுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. அங்கு நடைபெறும் 3ம் கட்ட அகழாய்வில் இதுவரை 200க்கும் மேற்பட்ட பழங்கால பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளதாக தொல்லியல் துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

# கடலூரில் அ.தி.மு.க. நிர்வாகி கொலை: எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை, ஜூலை 2

கடலூரில் அ.தி.மு.க. முன்னாள் கவுன்சிலர் புஷ்பநாதன் கொலை செய்யப்பட்டது அதிர்ச்சியளிப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடலூர் மாவட்டம் வண்டிப்பாளையம் பகுதியில் அ.தி.மு.க. மாவட்டப் பிரதிநிதியும் முன்னாள் கவுன்சிலருமான புஷ்பநாதன் 6 பேர் கொண்ட மர்ம கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்திகேட்டு அதிர்ச்சியுற்றேன். அன்னாரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன், மறைந்த புஷ்பநாதனின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில்சட்டம்ஒழுங்கு அடியோடு சீர்கெட்டுவிட்டதை நான் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளேன். தி.மு.க. ஆட்சியில் பொதுமக்கள், காவல்துறையினர், அரசியல் கட்சியினர் என யாருக்குமே பாதுகாப்பு இல்லை என்பதே உண்மை. பகல் இரவு என்று பாராமல், மக்கள் எப்போதும் அச்சத்துடனே நடமாடும் அளவிற்குசட்டம்ஒழுங்கு சீர்கெட்டு இருக்க, தான் சட்டம் ஒழுங்கை சிறப்புற காத்து வருவதாக மு.க.ஸ்டாலின் தம்பட்டம் அடித்துக்கொள்வது நகைமுரண். புஷ்பநாதன் அவர்களைப் படுகொலை செய்தோரை துரிதமாக கைது செய்து கடும் சட்ட நடவடிக்கை எடுக்க முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடிகர் விஜய் பேசியதில் உள்நோக்கம் இருப்பதாக தெரியவில்லை திருமாவளவன்



மதுரை, ஜூலை 2

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின்தலைவர் தொல். திருமாவளவன் கூறியதாவது: "கள்ளச்சாராய, நச்சுச்சாராய சாவு இந்தியா முழுமையும் உள்ளது. இதற்கு தீர்வு பூரண மது விலக்கு. டாஸ்மாக் கடையில் விற்கும் மதுவாலும் பாதிப்பு உள்ளது. ஆகவே தேசிய அளவில் மது விலக்கு கொள்கை அமல்படுத்த வேண்டும். மெத்தனால் மாபியா கும்பலை கண்டு பிடித்து தண்டிக்க வேண்டும். தமிழக அரசு முதலில் படிபடியாக டாஸ்மாக் கடைகளை மூட வேண்டும்.

கள்ளக்குறிச்சி விஷச்சாராய மரணத்தை நேரில் சென்று பார்த்த போது அங்குள்ள மக்கள் கூறியது டாஸ்மாக் கடைகளை மூட வேண்டும் என்று தான். கள் விற்பனை, டாஸ்மாக் மது உட்பட எந்த வகை மதுவும் வேண்டாம். முதல்வர் ஸ்டாலின் டாஸ்மாக் கடைகளை மூடினால் மக்களிடம் ஆட்சிக்கு நல்ல பெயர் கிடைக்கும். பூரண மது விலக்கை ஆதரித்து விசிக சார்பில் பெரியார் பிறந்த நாள் அன்று மிகப் பெரிய மகளிர் மாநாடு நடைபெற உள்ளது. மதுவிலக்கு சட்ட மசோதா நல்லது தான், ஆனால் பூரண மது விலக்கு என்பதே தீர்வு. நாடாளுமன்றத்தில் குடியரசு தலைவரின் உரை உண்மைக்கு மாறான உரை. அவர்கள் பெரும்பான்மை பெற்றதாககூறுவது தவறு.

கடந்த தேர்தலில் பெற்ற இடங்களை விட 63 இடங்கள் குறைவாக தேசிய ஜனநாயக கூட்டணி பெற்றுள்ளது. தவெக தலைவர் விஜய் மாணவர்களிடம் நல்ல தலைவர்கள் உருவாக வேண்டும் என கூறியதில் எந்த உள்நோக்கமும் இருப்பதாக தெரியவில்லை. மாணவர்கள் நல்ல தலைவர்களாக உருவாக வேண்டும் என்ற நோக்கத்தில் கூறியதாகவே நான் கருதுகிறேன் " என்று அவர் கூறினார்

# சுதா கொங்கரா இயக்கும் 'புறநானூறு' படத்தில் சூர்யாவிற்கு பதில் தனுஷ்



சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிக்க இருந்த 'புறநானூறு'திரைப்படத்தில் தனுஷ் நடிக்க வாய்ப்பிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

நடிகர் சூர்யா, சுதா கொங்கரா இயக்கத்தில் சூரரைப் போற்று எனும் திரைப்படத்தில் நடித்திருந்தார். இந்த படமானது மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றதனால் மீண்டும் சுதா கொங்கரா, சூர்யாவை இயக்கத் திட்டமிட்டார். அதன்படி இவர்களின் கூட்டணியில் உருவாக உள்ள புதிய படத்திற்கு புறநானூறு என்று தலைப்பு வைக்கப்பட்டது. சூர்யாவின் 43வது படமாக உருவாக இருக்கும் இந்த படத்தை சூர்யாவே தயாரிக்கப் போவதாகவும் அறிவிக்கப்பட்டது. இந்தி திணிப்பு சம்பந்தமான கதைக்களத்தில் இந்த படம் உருவாகப் போவதாகவும் சமூக வலைதளங்களில் செய்திகள் பரவி வந்தன. ஆனால் அரசியல் காரணங்களால் இந்த படத்தின் கதையை மாற்றும்படி சூர்யா, சுதா கொங்கராவிடம் சொல்ல, அதற்கு சுதா கொங்கரா மறுத்து விட்டதாகவும், இதனால் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும் செய்திகள் வெளியானது. எனவே புறநானூறு படம் கைவிடப்பட்டதாக சொல்லப்பட்டது. இந்நிலையில் சுதா கொங்கரா, சூர்யா இருவரும் தொலைபேசியில் பேசிக்கொண்ட போது புறநானூறு படம் அல்லாமல் வேறொரு படத்தை இருவரும் இணைந்து பண்ணலாம் என்று சூர்யா, சுதா கொங்கராவிடம் சொன்னாராம். ஆனால் அதற்கு சுதா கொங்கரா புறநானூறு திரைப்படம்தான் என்னுடைய அடுத்த படம். நீங்கள் ஹீரோவாக நடிக்கவில்லை என்றால் வேறொரு நடிகரை நடிக்க வைப்பேன் என்று சொல்லிவிட்டாராம். இது ஒரு பக்கம் இருக்க சுதா கொங்கராவின் புறநானூறு படத்தில் நடிப்பதற்கு பிரபல நடிகர் தனுஷ் ஆர்வம் காட்டி வருவதாக புதிய தகவல் வெளியாகி உள்ளது. சூர்யா புறநானூறு படத்திலிருந்து விலகி விட்டதால் தனுஷ் அப்படத்தில் நடிக்க வாய்ப்புள்ளதாக சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன. இருப்பினும் இது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று நம்பப்படுகிறது. நடிகர் தனுஷ் கைவசம் தற்போது 'ராயன்', 'குபேரா', 'நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்' ஆகிய படங்கள் உள்ளது.

# 'கனகராஜ்யம்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



மலையாள நடிகரான இந்திரன்ஸ், ஹோம் திரைப்படத்திற்காக தேசிய திரைப்பட விருதுகள் பெற்றவர். இந்திரன்ஸ் மற்றும் முரளி கோபி நடிப்பில் 'கனகராஜ்யம்' என்ற மலையாள திரில்லர் உருவாகியுள்ளது. இந்த படத்தின் டிரெய்லர் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. இந்தப்படத்தினை சாகர் ஹரி இயக்கியுள்ளார். 'சத்யம் மாதமே போதிக்கூ' மற்றும் 'வீகம்' படங்களுக்குப் பிறகு சாகர் இயக்கும் மூன்றாவது படம் இது. ஸ்ரீஜித் ரவி, கோட்டயம் ரமேஷ், உன்னி ராஜ், அச்சுதானந்தன், ஜேம்ஸ் எலியா, ரம்யா சுரேஷ் மற்றும் அதிரா படேல் ஆகியோரும் நடித்துள்ளனர். இந்தப்படத்தில் இந்திரன்ஸ் முன்னாள் ராணுவ வீரராக அறிமுகப்படுத்தியுள்ளனர். மேலும் முரளி கோபி எளிய குடும்பத்தை சேர்ந்த மனிதராக இருக்கிறார். ஆச்சரியங்களும், திருப்பங்கள் நிறைந்த கதையாக உள்ளதாக தெரிகிறது. 'கனகராஜ்யம்' ஒரு குடும்ப படம் என்று கூறப்படுகிறது. இந்தநிலையில் இப்படம் ஜூலை 5ம் தேதி திரையரங்குகளில் வெளியிடப்படும் என்ற அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகி உள்ளது.

# பாலிவுட்டில் ஆதித்யா ராய் கபூருக்கு ஜோடியாகும் சமந்தா

நடிகை சமந்தா, பாலிவுட்டில் ஆதித்யா ராய் கபூருடன் இணைந்து ரக்தபீஜ் என்ற வெப் தொடரில் நடிக்க இருக்கிறார்.

இந்திய சினிமாவில் டாப் நடிகையாக வலம் வருபவர் நடிகை சமந்தா. அவர் அறிமுகமாகி நடித்தது தமிழாக இருந்தாலும், இன்று அவர் கோலிவுட் நடிகையாக மட்டுமன்றி இந்திய அளவில் ஹிட் நடிகையாக உருவெடுத்துள்ளார். தென்னிந்தியா மட்டுமன்றி வட இந்தியாவிலும் அவருக்கு பல கோடி ரசிகர்கள் உள்ளனர். மாஸ்கோவின் காவிரி என்ற படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமாகினார். இதைத் தொடர்ந்து சமந்தாவிற்கு அடுத்தடுத்து பட வாய்ப்புகள் குவியத் தொடங்கின. தமிழில் ஒரு முன்னணி நடிகையாக உயரத் தொடங்கினார்.

தமிழில் டாப் நடிகையாக உருவெடுத்த சமந்தா அதேசமயம், தெலுங்கிலும் பல படங்களில் நடித்தார். இதையடுத்து பாலிவுட் பக்கம் அவருக்கு வாய்ப்புகள் குவியத் தொடங்கின. பேமிலி மேன் என்ற படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமானார். இது ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இதனிடையே சருமப் பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ள அவர், தொடர்ந்து வெளிநாடுகளுக்கு சென்று பல சிகிச்சைகள் பெற்று வருகிறார்.

இந்நிலையில், நடிகை சமந்தா, பாலிவுட்டில் ஆதித்யா ராய் கபூருடன் இணைந்து ரக்தபீஜ் என்ற வெப் தொடரில் நடிக்க இருக்கிறார். ராஜ் டி கே ஆகியோர் இந்த தொடரை இயக்குகின்றனர். இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என்று கூறப்படுகிறது. இதற்கு முன்பாக நீதானே என் பொன்வசந்தம் படத்தின் இந்தி ரீமேக்கில் சமந்தாவும், ஆதித்யா ராய் கபூரும் இணைந்து நடித்தது குறிப்பிடத்தக்கது.

# 'இந்த ரீல்ஸ் உலகத்தில் அனைவருக்கும்...' நடிகை மயூரி காயத்திரி



கன்னட திரையுலகில் வளர்ந்து வரும் நடிகையாக இருப்பவர் மயூரி காயத்திரி. இவர் கடந்த 2015ம் ஆண்டு அஜய் ராவ் நடிப்பில் வெளியான 'கிருஷ்ண லீலா' படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானார். சிறந்த கன்னட நடிகைக்கான விருதுக்கும் இப்படத்தில் நடித்ததற்காக பரிந்துரைக்கப்பட்டார்.

பின்னர், தனது நீண்டகால காதலரான அருணை கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில், தற்போது அனைவருக்கும் நடிகர் ஆகும் ஆசை இருப்பதாக நடிகை மயூரி காயத்திரி கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'இந்த ரீல்ஸ் உலகத்தில் அனைவருக்கும் நடிகர் ஆகும் ஆசை இருக்கிறது. அதற்கு நம்மிடம் ஒழுக்கம் மற்றும் விடாமுயற்சி அவசியம். நடிக்கும் திறனை வளர்ப்பதற்கு தொலைக்காட்சி ஒரு சிறந்த மேடையாக இருக்கும். இதன் மூலம் ரசிகர்களுடன் இணைந்து இருக்க முடியும். தொடர்ந்து நடிப்பதன் மூலம் ஒவ்வொரு நாளும் கற்றுக்கொள்ளவும், வளரவும் முடியும், 'என்றார்

# சிம்பு மற்றும் ஐஸ்வர்யா ராய் நடிக்க இருந்த படம் கைவிடப்பட்ட காரணம் தெரியுமா?



விஜய் நடிப்பில் விரைவில் திரைக்கு வரவுள்ள படம் 'தி கோட்'. இப்படத்தை வெங்கட் பிரபு இயக்கியுள்ளார். மேலும், இப்படத்தில் கபிலன் வைரமுத்து பாடலாசிரியராக பணியாற்றுகிறார். இந்நிலையில், பாடலாசிரியர் கபிலன் வைரமுத்து, சிம்பு மற்றும் ஐஸ்வர்யா ராய் ஆகியோர் நடிக்க இருந்த படம் ஒன்று கைவிடப்பட்டது குறித்து கூறியுள்ளார்.


இது குறித்து அவர் கூறுகையில்,

'சிம்பு மற்றும் ஐஸ்வர்யா ராயை வைத்து ஒரு படம் எடுக்க நீண்ட காலமாக திட்டமிடப்பட்டிருந்தது. இந்த படத்தை மறைந்த இயக்குனர் கே.வி.ஆனந்த் இயக்க இருந்தார். 2019ம் ஆண்டு இதற்கான பணிகள் ஆரம்பமாகின.

ஆனால், கொரோனா தொற்று அப்போது பரவ ஆரம்பித்ததால் படப்பிடிப்பு தடைபட்டது. மேலும், இயக்குனர் கே.வி. ஆனந்தும் மறைந்ததால் படம் முற்றிலும் கைவிடப்பட்டது', என்றார்.

இயக்குனர் கே.வி.ஆனந்த் 2021ல் மாரடைப்பால் காலமானார். 'அயன்', 'கோ' 'காப்பான்' போன்ற பல வெற்றிப் படங்களை இயக்கியுள்ளார்.

# மலையாள நடிகர் சங்கத்தின் பொதுச்செயலாளராக நடிகர் சித்திக் தேர்வு



கோகுலம் கருத்தரங்க மையத்தில் நேற்று மாலை நடந்த அம்மா அமைப்பின் வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் இதற்கான தேர்தல் நடைபெற்றது . இந்த கூட்டத்தில் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதிய ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது உண்டு . அதன்படி இம்முறை மோகன்லால் எதிர்ப்பின்றி அம்மா அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கடந்தஎட்டுமுறை அம்மா அமைப்பின் பொதுச்செயலாளராக இருந்த நடிகர் இடைவேளை பாபு தானாக முன்வந்து தனது பதவியை நிறைவு செய்ததுடன் இனி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்ததை அடுத்து அவரது பின் தொடர்ச்சியாக நடிகர் சித்திக் தேர்தலில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து நடிகை குக்கு பரமேஸ்வரன், உண்ணி சிவபால் ஆகியோர் போட்டியிட்டனர் . இந்த தேர்தலில் நடிகர் சித்திக் , நடிகர் சங்கத்தின் அதிகாரப்பூர்வ வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார் . இவரை எதிர்த்துப் போட்டியிட்ட குக்கு பரமேஸ்வரன் மற்றும் உண்ணி சிவபால் ஆகியோர் தோல்வி அடைந்தனர்.

அத்துடன் கடந்த காலங்களில் நான்கு முறை செயற்குழு உறுப்பினராக பதவி வகித்தவர் நடிகை குக்கு பரமேஸ்வரன். துணை தலைவர் பதவிக்கு போட்டியிட்ட நடிகை மஞ்சு பிள்ளை தோல்வி அடைந்தார் . அனூப் சந்திரன், ஜெயன் சேர்த்தலா ஆகியோர் தலைவர் பதவிக்கு போட்டியிட பத்திரிக்கை தாக்கல் செய்து இருந்தாலும், நடிகர் மோகன்லால் தேர்தலில் போட்டியிட தயாரானவுடன் அவர்கள் தங்களது மனுவை வாபஸ் பெற்றது குறிப்பிடத்தக்கது.

நடிகர் உண்ணி முகுந்தன் இந்த அமைப்பின் பொருளாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நடிகர் இடைவேளை பாபு கடந்த 2018 ம் ஆண்டு முதல் தொடர்ந்து பொதுச் செயலாளர் பதவி வகித்து வருகிறார். இம்முறை நடந்த தேர்தலில் நடிகர்கள் ஜெகதீஷ் மற்றும் ஜெயன் சேர்த்தலா ஆகியோர் துணைத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# ஓய்வு பெறுவதற்கு இதை விட சிறந்த தருணம் கிடைக்க வாய்ப்பில்லை கோலி, ரோகித் குறித்து கம்பீர் கருத்து




9வது டி20 உலகக்கோப்பை தொடரில் இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. 17 ஆண்டுகள் கழித்து டி20 உலகக்கோப்பை தொடரில் இந்தியா சாம்பியன் பட்டம் வென்றதை ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

இதனிடையே இறுதிப்போட்டியில் ஆட்ட நாயகன் விருது வென்ற நிலையில், இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். ஆட்ட நாயகன் விருது வாங்கும் நிகழ்வில் இதனை அறிவித்தார். அவரை தொடர்ந்து சிறிது நேரத்திலேயே இந்திய அணியின் கேப்டனான ரோகித் சர்மாவும் ஓய்வை அறிவித்தார். டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும், டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து விளையாட உள்ளனர்.

இந்நிலையில் விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா ஓய்வு குறித்து பேசிய கவுதம் கம்பீர் கூறுகையில், "டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதற்கு இதைவிட சிறந்த தருணம் கிடைக்க வாய்ப்பில்லை. ரோகித், கோலி இருவரும் சிறந்த வீரர்கள். இந்திய அணிக்காக நிறைய செய்துள்ளனர். இருவரும் ஒருநாள், டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து விளையாட உள்ளனர். தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடி இந்திய அணியின் வெற்றிக்கு பங்காற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன்"என கூறினார்.

# கோபா அமெரிக்க கால்பந்து தொடர்: பெரு அணியை வீழ்த்தி அர்ஜென்டினா வெற்றி



உலகக் கோப்பை, யூரோ கோப்பை கால்பந்து தொடருக்கு அடுத்து புகழ்பெற்ற கோபா அமெரிக்க கால்பந்து தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் கடந்த 1916ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த தொடர் வரும் 15ம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்நிலையில் இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் அர்ஜென்டினா பெரு அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் அர்ஜென்டினா அணி ஆதிக்கம் செலுத்தியது. அர்ஜென்டினா வீரர் லவுட்டாரோ மார்டினஸ் ஆட்டத்தின் 2வது பாதியில் 47வது நிமிடத்திலும் , 86வது நிமிடத்திலும் கோல் அடித்தார். இதனால் அர்ஜென்டினா அணி 20 என வெற்றி பெற்றது.

# திருமணமான ஒன்றரை மாதத்தில் பிரபல மல்யுத்த வீரர் தற்கொலை ரசிகர்கள் அதிர்ச்சி



பிரபல மல்யுத்த வீரர் சுராஜ் நிக்கம் (வயது 30). மராட்டிய மாநிலம் சாங்லி மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவருக்கு கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன் திருமணமானது.

இந்நிலையில், மல்யுத்த வீரர் சுராஜ் நேற்று தனது வீட்டில் தற்கொலை செய்துகொண்டார். சுராஜின் செல்போனுக்கு வெகுநேரம் தொடர்புகொண்டும் அவர் பதில் அளிக்காததால் உறவினர்கள் வீட்டிற்கு சென்று பார்த்துள்ளனர். அப்போது அங்கு சுராஜ் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார். இதையடுத்து சுராஜை மீட்டர் உறவினர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். அவரை பரிசோதித்த டாக்டர்கள் சுராஜ் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் மல்யுத்த வீரர் சுராஜ் தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். மல்யுத்த வீரர் சுராஜ் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அவரது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பிரபல ஓட்டப்பந்தய வீராங்கனை ஒலிம்பிக்கில் இருந்து விலகல்



பிரான்ஸ் தலைநகரான பாரீசில் வரும் ஜூலை 26 ம் தேதி முதல் ஆகஸ்ட் 11ம் தேதி வரை ஒலிம்பிக் போட்டி நடைபெறுகிறது.

இந்நிலையில் ஜமைக்காவைச் சேர்ந்த பிரபல ஓட்டப்பந்தய வீராங்கனை எலைன் தாம்சன் ஹெரா, பாரீஸ் ஒலிம்பிக்கில் இருந்து விலகியுள்ளார். அவர் கடந்த இரு ஒலிம்பிக்கில் 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் ஓட்டத்தில் தொடர்ச்சியாக தங்கப்பதக்கம் வென்று வரலாறு படைத்துள்ளார். பின்னங்காலில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்படும் அவருக்கு தசைநாரில் லேசான கிழிவும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் அவர் விலகியுள்ளார்.

# சர்வதேச கிரிக்கெட்டில் ரோகித் சர்மா மற்றும் வில்லியம்சன் மட்டுமே படைத்துள்ள தனித்துவ சாதனை



ஐ.சி.சி. 9வது டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் நேற்றுடன் முடிவடைந்தது. இதில் தென் ஆப்பிரிக்க அணியை வீழ்த்தி ரோகித் சர்மா தலைமையிலான இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.

முன்னதாக கடந்த வருடம் நடைபெற்ற டெஸ்ட் சாம்பியன்ஷிப் மற்றும் ஒருநாள் உலகக்கோப்பை தொடர்களில் இறுதிப்போட்டி வரை முன்னேறிய ரோகித் சர்மா தலைமையிலான இந்தியா இரண்டிலும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தோல்வியை தழுவியது. அதன்பின் தற்போது டி20 உலகக்கோப்பையை வென்று பெருமை சேர்த்துள்ளது.

மறுமுனையில் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் முதல் சீசனிலேயே கோப்பையை வென்று அசத்தியது. அவரின் தலைமையில் சிறப்பாக செயல்பட்ட நியூசிலாந்து அணி 2019 ஒருநாள் உலகக்கோப்பை மற்றும் 2021 டி20 உலகக்கோப்பை தொடர்களில் இறுதிப்போட்டி வரை முன்னேறி அசத்தியது. இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் 3 வடிவிலான போட்டி களிலும் (டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20) கேப்டனாக பங்கேற்ற வர்கள் என்ற தனித்துவமான சாதனையை வில்லியம்சன் மற்றும் ரோகித் படைத்து ள்ளனர்.





நயனில னென்பது சொல்லும் பயனில

பாரித் துரைக்கும் உரை

**விளக்கம்:**

ஒருவன் பயனில்லா பொருள்களைப் பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறம் இல்லாதவன் என்பதை அறிவிக்கும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.